1st April 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நினைக்கிறேன். அந்த சமயம் பரிசீலனை செய்தபோது முந்தைய ஆண்டுக் கணக்குகளெல்லாம்தான் இருந்தன. அதனால் அவர்கள் செய்த சிபாரிசுகள் பிரசுரம் ஆகும்போதே அதற்கு மேலேயே நடந்து விட்டது. இந்த முறை எடுத்துக்கொண்டால் அதற்கு வேண்டிய எல்லாவித உதவிகளும் கொடுத்து அந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சிபாரிசுகளையெல்லாம் சர்க்கார் மிகக் கவனத்தோடு ஆலோசிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு அவசியம் ஏற்பட்டால் நாம் நிபுணர்களைப் பார்க்கச் சொல்லலாம். டிபார்ட்மெண்டைப் பரிசீலனை செய்யச் சொல்லுவதல்ல. சென்னை ராஜ்ய மொத்த டிரான்ஸ்போர்ட் எப்படி இருக்கவேண்டும், சென்னை ராஜ்யத்தினுடைய போக்குவரத்து நிலை இன்றைக்கு எப்படி இருக்கிறது, இதற்கு எந்தவித பெரிய முன்னேற்றங்கள் செய்யவேண்டுமென்று, எப்படி இண்டஸ்ட்ரீசைப் பொறுத்த வரையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை ராஜ்யத்திற்கு என்னென்ன தேவைப் படுகிறது என்று பார்த்து ஒரு அறிக்கையை நாஷனல் கவுன்சில் ஆஃப் அப்ளைட் இகனாமிக்ஸ் என்ற ஸ்தாபனத்தைக் கொடுக்கச் சொன்னோமோ, அந்த மாதிரி விரிவான முறையில் செய்யலாம். அப்படிச் செய்வதற்கு முன்னால் ஏதாவது ஒரு அறிக்கை இருப்பதுதான் நல்லது. அந்த அறிக்கையை நம்முடைய சட்ட சபை எஸ்டிமேட்ஸ் கமிட்டி பரிசீலனை செய்து கொடுக்குமானால், அதற்கு மேல் சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களைச் சொன்ன பிறகு, கனம் கலியாணசுந்தரம் அவர்கள் தங்களுடைய தீர்மானத்தை வாபஸ் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் என்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

The Resolution was, by leave, withdrawn.

VI.—ANNOUNCEMENT.

BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER: I have to announce to the House that the following Bills have been passed by the Legislative Council without any recommendation:

1. The Madras General Sales Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 6 of 1965).

2. The Madras Appropriation (No. 2) Bill, 1965 (L.A. Bill No. 8 of 1965).

3. The Madras Appropriation (No. 3) Bill, 1965 (L.A. Bill No. 9 of 1965).

The House will now adjourn and meet again at 8-30 a.m. on Saturday, the 3rd April 1965.

The House then adjourned.